# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No.133 of 2021

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ஆனந்தன் |
| தந்தை பெயர் | : | திரு. கோவிந்து |
| வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 19.08.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.

**பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

பிரதிவாதி எவ்வளவு அளவு இடத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்று நான் அளந்து பார்த்ததில்லை என்றால் சரியல்ல. அளந்து பார்த்தேன். அவர் 60 அடி நீளம் 43 அடி அகலம் சுவாதீனத்தில் உள்ளார். அதற்கு உண்டான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி 60 அடி நீளம் 40 அடி அகலம் மொத்தம் 2400 அடி அளவில்தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. 2020-ம் ஆண்டு பிரதிவாதி வேலி அமைத்தார். 2018-ம் ஆண்டு நான் இடத்தை அளந்து பார்த்தேன்.

2. எனது வாதுரையில் பத்தி 6ல் 2018ம் ஆண்டு பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வேலி போட்டதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். எனது வாதுரையின் 7 வது பத்தியில் பிரதிவாதி 20.07.2020 அன்று கம்பி வேலி போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவற்றில் எது உண்மை என்றால் இரண்டுமே உண்மைதான்.

3. எனது பிரமான வாக்கு மூலத்தில் பத்தி 5ல் கூறியுள்ள விபரங்கள் எதையும் எனது வாதுரையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது வாதுரையில் சொல்லியுள்ள விபரங்களும், பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களும் வெவ்வேறானது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் எனது பிரமான வாக்குமூலத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த இடத்தை என்னை எடுத்துக்கொள்ளச் சொன்னார் என்று நான் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதலில் பிரதிவாதி மீது தேவனாம்பட்டிணம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். அதன்பிறகு காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் எங்களை விசாரிக்கவில்லை. காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நில அபகரிப்பு பிரிவில் எங்களை விசாரித்தார். அங்கு வைத்து உரிமையியல் நீதிமன்றத்தை நாடி தீர்வு காணும்படி சொன்னார்கள் என்றால் சரியல்ல.

5. போலீசார் பிரதிவாதியை அவர் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை காலி செய்யுமாறு அறிவுரை கூறினார்கள். அவ்வாறு எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமான வாக்கு மூலத்தில் பத்தி 8ல் கூறியுள்ள விபரங்கள் எதையும் எனது வாதுரையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது வாதுரையில் சொல்லியுள்ள விபரங்களும், பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களும் வெவ்வேறானது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது வாதுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் முன்னுக்கு பின்னான விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரமான வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான்.

6. எனது பிரமான வாக்கு மூலத்தில் பத்தி 8ல் மனை எண்-52-ன் அளவு 43 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்டதாக நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அதன் உண்மையான அளவு 40X60 என்றால் சரியல்ல. மனை எண்-52 பெரிய சாமி நகரின் கிழக்கு எல்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு என்ன நகர் ஆரம்பிக்கிறது என்று எனக்குத் தெரியாது. பொதுவாக மனைபிரிவு அமைக்கும்போது சுற்றிலும் 3அடி நிலம் ஒதுக்கிவைப்பது வழக்கம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அவ்வாறு மனைப்பிரிவு அமைத்தவர் ஒதுக்கிவைத்திருந்த இடத்தைதான் மனைபிரிவு 52ன் உரிமையாளர் பத்திரத்தில் எழுதிக்கொண்டார் என்றால் சரியல்ல.

7. மனை எண்-53 மற்றும் 54 ன் அளவுகள் 40X60 ஆகும். மனை எண்-53 மற்றும் 54 ஐ நான் அளந்து பார்த்தேன். அதன் அளவுகள் சரியாக இருந்தது. பிரதிவாதி எந்த இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சரியான நபர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் உரையில் கடந்த 02.05.2012 அன்று மனை எண்-55ஐ அவரது மகனுக்கு தான செட்டில்மெண்டு எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதி மகன் நீலகண்டன் என்பவரை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதியோ அல்லது அவரது மகனோ எனது இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.